# அத்தியாயம் 13

## சென்னைப் பெருநகர் பகுதியில் உள்கட்டமைப்பு முதலீடுகள்

### அ. சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம்

சமூகம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு நகரங்கள் பெரும் பங்கு வகிக்கிறது. உள்கட்டமைப்பு வசதிகளில் பொது மக்கள் மற்றும் தனியார் முதலீடு, தேசிய பொருளாதார மற்றும் சமூகத்தேவைகள், முன்னேற்றமான வாழ்க்கை நிலை, வறுமை ஒழிப்பு போன்றவற்றிற்கு ஆற்றல் மிக்க மற்றும் செயல் திறன் வாய்ந்த நகரங்களின் பங்கு அவசியமானது.

13.02 சுற்றுப்புற சூழலின் பின்னடைவு பொருளாதாரவளர்ச்சியை தடுத்து நிறுத்துகிறது. சுற்றுப்புறசூழலின் தரத்தை உயர்த்தி நகரத்தை அழகாக்கி வாழத் தகுந்ததாக மாற்றும் செயல்பாடு நம் முன்னிருக்கும் ஒரு முக்கியமான சவாலாகும். முதலீட்டுகளை சரியான முறையில் ஒழுங்குபடுத்தி, நல்ல முறையில் திட்டமிட்டு, நிர்வகித்து மற்றும் நகர்ப்புறச் சேவைகளை பராமரிப்பதன் மூலம் இச்சேவைகளின் தரத்தை உயர்த்தலாம்.

13.03 ஒவ்வொரு குடிமகன் / குடிமகளுக்கும் தான் வாழும் நகரத்தைப் பற்றிய தனிப்பட்ட கருத்து ஒன்று இருக்கும். இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்பு திட்டங்களினால் சென்னைப் பெருநகர மக்கள் அடையும் நன்மைகள் பின்வருமாறு.

- வாழ்க்கைத்தரத்தில் முன்னேற்றம்
- உயர்ந்த வாழ்க்கை நிலை
- பணிச் சேவைகளில் மேம்பாடு
- இணக்கமான சுற்றுச் சூழல் பகுதி
- மாசு குறைவு
- பொது மற்றும் தனியார் போக்குவரத்தின் மூலம் சீரான பயணம்.
- சாலையில் நெரிசலைக் குறைத்தல் / வாகனங்கள் நிறுத்தும் இடத்தை சீர்படுத்துதல்
- வேலை வாய்ப்பை அதிகரிக்க தொழில் மற்றும் வணிக நிறுவனங்களை ஈர்த்தல்.

### முதலீடு செய்பவர்கள் அடையும் பலன்கள்:

13.04 கடந்த சில ஆண்டுகளாக தொழில்நுட்பத் தொழில்கள் உட்பட, பல தொழில்களை சென்னை கவர்ந்திழுத்துள்ளது. இயற்கையாகவே சென்னையில் அமைத்திருக்கும் கடற்கரைத் துறைமுகம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள், சென்னை நகரத்தின் வலிமை அது கொண்டுள்ள பல நல்ல உள்ளடக்கிய அமைப்புகள் மற்றும் திறமை வாய்ந்த தொழிலாளர்கள், வளர்ச்சிப்பணிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள நிலங்கள் பொறுத்தே அமைந்துள்ளது.

13.05 ஒரு திட்டமிடப்பட்ட, ஒருங்கிணைந்த முறையில் உள்கட்டுமான வளர்ச்சிக்கான முதலீடு செய்வதற்கான தேவையை கருத்தில் கொண்டு, செ.பெ.வ.குழுமம் (CMDA) துறைசார் நிறுவனங்கள் மற்றும் உரிய உள் ஆட்சி அமைப்புகளுடன் ஆலோசித்து சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் என்று அழைக்கப்படும் உள்கட்டுமான முதலீட்டுத் திட்டத்தை முன்மொழிந்துள்ளது.

13.06 திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆவன

i) ஒவ்வொரு துறையிலும் தேவையான கட்டமைப்பு தேவைகளை இனம் கண்டு அதற்குறிய உத்தேச திட்டங்களை வகுத்தல்
ii) ஒவ்வொரு திட்டம் செயலாக்குவதற்கான நிதி தேவையை கண்டறிதல்
iii) நிதி ஆதாரங்களை கண்டறிதல்
iv) திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி ஆண்டுத்திட்டம், இடைக்காலத் திட்டம் மற்றும் நெடுங்காலத் திட்டமாக வகுத்தல்.

13.07 சென்னைப் பெருநகரின் நகர்புற வளர்ச்சிக்கும் பராமரிப்பிற்க்கும் தனித்தனி துறைகள் மற்றும் முகமைகள் உள்ளன அதாவது குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுவதற்கு சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம், தமிழ் நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மற்றும் அந்தந்த உள்ளாட்சி நிறுவனங்களும், மின்சாரத்திற்கு தமிழ் நாடு மின்சார வாரியமும் திடக் கழிவு

மேலாண்மைக்கு அந்தந்த உள்ளாட்சி நிறுவனங்களும் சாலைகளுக்கு நெடுஞ்சாலைத் துறையும் மழைநீர் வடிகாலுக்கு பொதுப்பணித் துறையும் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் திட்டத்திற்கான நிதி ஆதாரங்களுக்கு மைய அரசு, மாநில அரசு மற்றும் நிதி நிறுவனங்களைச் சார்ந்துள்ளன. இத்திட்டத்தில் செயலாக்கப்பட உள்ள திட்டங்களின் செலவீனங்கள் பல கோடி ரூபாய் மதிப்புள்ளதால் இத்திட்டங்களை மாநில அரசின் வரவு செலவு திட்டத்தின் மூலமே செயலாக்க முடியாது. இத்திட்டங்களுக்கு தேவையான கூடுதலான நிதிகளை கண்டறிய வேண்டும்.

13.08 1 மாநகராட்சியையும், 16 நகராட்சிகளையும், 20 பேரூராட்சிகளையும் மற்றும் 214 கிராம உள்ளாட்சிகளை உள்ளடக்கிய 10 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய சென்னை பெருநகருக்கான கட்டமைப்பு தேவைகளை அந்தந்த துறைகளிடமிருந்து பெற்று முதலீட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

13.09 முதலீட்டுத் திட்டம் 3 வகையாக பிரிக்கப்பட்டுள்ளது – ஆண்டுத்திட்டம், இடைக்காலத் திட்டம் மற்றும் நெடுங்காலத் திட்டம். உடனடியாக முதலீடு தேவையான திட்டங்கள் ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இடைக்கால உள்கட்டமைப்பு வசதிகளை செய்யும் திட்டங்கள்இடைக்காலத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. பெரு மூலதனம் மற்றும் நீண்டகால செயலாக்கக் காலம் தேவைப்படும் திட்டங்கள் நீண்ட கால திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

| அட்டவணை எண். 13.01 முதலீட்டுத் திட்டம் | | (ரூபாய் கோடியில்) | |
|---|---|---|---|
| திட்டம் / நிறுவனம் | ஆண்டுத் திட்டம் (2003–2004) | நடுத்தர கால திட்டம் (2004–2007) | நீண்டகால திட்டம் |
| **போக்குவரத்து மற்றும் போக்குவரவு** | | | |
| நகர்புற இரயில் திட்டங்கள் | 165.00 | 519.24 | 3528.00 |
| சாலை /ஆற்றுப் பாலங்கள் | 3.00 | 7.00 | – |
| போக்குவரத்து மேலாண்மை | 11.94 | 3.00 | – |
| பிரதான சாலைகளை மறுசீரமைத்தல் | 43.11 | – | – |
| புறநகர சாலைகளை வலுப்படுத்துதல் | 4.54 | 13.62 | 4.56 |
| வெளி வட்டச் சாலை | – | 250.00 | 250.00 |
| மாநகரச் சாலைகளை அகலப்படுத்தலும் வலுப்படுத்தலும் | 57.80 | – | – |
| புதிய சாலை அமைத்தல் | 21.50 | – | 350.00 |
| மாநகரச் சாலைகளை மறுமுறை அமைத்தல் | 99.00 | 297.00 | – |
| பிரதான பெருவழிச் சாலைகளின் திறனை அதிகரிப்பதற்கான ஆய்வு | 0.25 | 3.55 | – |
| அகலப்படுத்தலும் வலுப்படுத்தலும் | – | 1595.58 | – |
| அண்ணா சாலையை சிமெண்ட் காரை தள சாலை ஆக்குதல் | - | 101.32 | – |
| சாலை மேம்பாலம் / சுரங்கப் பாலம் | - | 832.71 | – |
| பேருந்து முனையம் | - | 6.00 | – |
| பல் அடுக்கு வாகன நிறுத்தம் | - | 48.00 | – |
| நகரச் சாலைத் திட்டங்கள் | - | – | 1126.00 |
| நகர மாற்றுப் போக்குவரத்து முறைகள் | - | – | 855.00 |
| சரக்குந்து முனையம் | - | 80.00 | – |
| **துணை மொத்தம்** | **406.14** | **3757.02** | **6113.56** |

| அட்டவணை எண். 13.01 முதலீட்டுத் திட்டம் | | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| திட்டம் / நிறுவனம் | ஆண்டுத் திட்டம் (2003–2004) | நடுத்தர கால திட்டம் (2004–2007) | நீண்டகால திட்டம் |
| **வீட்டு வசதி** | | | |
| தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் | 5.00 | 570.00 | – |
| தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் | 27.70 | 330.41 | 325.00 |
| **துணை மொத்தம்** | **32.70** | **900.41** | **325.00** |
| **குடிநீர் வசதி** | | | |
| சென்னை பெருநகர் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் | **730.00** | **946.00** | **649.18** |
| **கழிவுநீர் அகற்றல்** | | | |
| சென்னை பெருநகர் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் | 295.00 | 607.00 | 897.78 |
| சென்னை பெருநகரப் பகுதி (திருவொற்றியூர் நகராட்சி) | 28.00 | – | – |
| **துணை மொத்தம்** | **323.00** | **607.00** | **897.78** |
| **மழைநீர் வடிகால்** | | | |
| சென்னை மாநகராட்சி | 40.00 | 47.00 | - |
| பொதுப்பணித் துறை | 44.65 | 3.65 | - |
| நெடுஞ்சாலைத் துறை | 3.68 | – | - |
| சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் | 0.68 | – | - |
| சென்னை பெருநகரப் பகுதி | 13.77 | – | - |
| நகர மற்றும் ஊரக சீரமைப்பு இயக்ககம் | 8.94 | 10.59 | - |
| **துணை மொத்தம்** | **111.72** | **61.24** | **-** |
| **திடக் கழிவு மேலாண்மை** | | | |
| சென்னை மாநகராட்சி | **16.00** | **35.00** | **-** |
| சென்னை பெருநகரப் பகுதி | **11.19** | **16.25** | **-** |
| **துணை மொத்தம்** | **27.19** | **51.25** | **–** |
| **மின்வசதி** | | | |
| தமிழ் நாடு மின்சார வாரியம் | 150.00 | 1910.81 | – |
| **மொத்தம்** | **1780.75** | **8233.73** | **7985.52** |
| **முழுமொத்தம்** | | | **18000.00** |

13.10 நிதிக்கான மூல ஆதாரங்கள் என்னவென்றால், நிதி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் கடன் தொகை மற்றும் அரசிடமிருந்து கிடைக்கப்பெறும் வரவு செலவுக்கான தொகை மற்றும் மான்யங்களாகும். வீடு, தண்ணீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் திட்டங்கள் பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் திட்டமிடப்பட்டுள்ளது.

13.11 மொத்த திட்டத்தின் அடிப்படையில் ஆண்டு திட்டங்கள், அந்தந்த பிரிவுகள், முகமைகளுடன் கலந்தாலோசித்து ஆண்டுத்திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. அரசு, வரவு செலவு

கணக்கில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2003-04 முதல் ஆண்டுத்திட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் முன்னேற்றத்தினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கண்காணித்து அரசிற்கு தெரிவிக்கிறது. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பிரிவு வாரியாக 2003 முதல் செய்யப்பட்ட முதலீடுகளைப் பற்றிய விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டுத் திட்டம் 2003-04, 2004-05, 2005-06 & 2006-07 | | | (ரூபாய் கோடிகள் ) | |
|---|---|---|---|---|
| திட்டம் | 2003–04ல் முதலீடுகள் | 2004–05ல் முதலீடுகள் | 2005–06ல் முதலீடுகள் | 2006–07ல் முதலீடுகள் |
| போக்குவரத்து போக்குவரவு | 412.16 | 237.28 | 179.48 | 199.28 |
| வீட்டுவசதி | 40.77 | 65.17 | 65.27 | 68.91 |
| குடிநீர் வழங்கல் | 581.60 | 309.03 | 99.61 | 92.67 |
| கழிவுநீர் | 83.16 | 122.88 | 66.23 | 49.58 |
| மழைநீர் வடிகால் | 38.97 | 40.39 | 103.10 | 17.71 |
| திடக்கழிவு மேலாண்மை | – | 3.695 | 6.06 | 9.94 |
| மின்சாரம் | 164.88 | 179.21 | 211.32 | 188.52 |
| பிற | – | – | 3.36 | 0.44 |
| மொத்தம் | 1321.54 | 957.66 | 795.58 | 670.23 |

**ஆ. ஜவஹர்லால் நேரு தேசிய நகர மறு சீரமைப்பு திட்டம்**

13.12 இந்திய அரசால் 2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஜவஹர்லால் நேரு நகர மறு சீரமைப்பு திட்டத்தால், ஊக்குவிக்கப்பட்ட துரித வழி திட்டத்தினால் இனங்கானப்பட்ட நகரங்களின் உள் கட்டமைப்புத் திறன் / சேவை வெளியீடு செயற்பாடுகள் எண்ணிலடங்கா.

13.13 நகர ஏழை மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதல் உள்ளிட்டு, கீழ் கண்டவற்றை அளிப்பதை இத் திட்டம் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

1. இத்திட்டத்தில் வரும் நகரங்களுக்கு ஒருங்கிணைந்த உள் கட்டமைப்பு வசதிகளை அளித்தல்.

2. நீண்ட கால நீடித்த நிலையான திட்டங்களுக்கு நகர சொத்து ஏற்ப்படுத்தல் மற்றும் நகர சொத்து பராமரித்தலுக்கான இணைப்புகளை ஏற்படுத்துதல்.

3. நகர உள் கட்டமைப்பு வசதிகளில் உள்ள குறைப்பாடுகளைப் போக்க தேவையான நிதி ஆதாரங்களை பெற உறுதி செய்தல்.

4. நகர் புற பகுதி உள்ளிட்ட கண்டறியப் பட்ட நகரங்களில் நகரமயமாக்கல் பரவுவதற்கான நகர திட்டமைத்தல்.

5. எல்லா ஏழைக் குடிமக்களும் அணுகும் வகையில் சிறப்பான நகர சேவை அளித்தல்.

6. நகர மையப் பகுதி மற்றும் பழைய பகுதிகளில் நெரிசலைத் தவிர்ப்பதற்கு நகர புனரமைப்பு திட்டத்திற்கு சிறப்பான இடத்தை அளித்தல்.

7. வாங்கத்தக்க விலையில் நில உடமை மேம்பட்ட வீட்டு வசதி, குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை நகர்புற ஏழை மக்களுக்கு அளித்தல் மற்றும் கல்வி, உடல் நலம் மற்றும் சமூக பாதுகாப்பு உள்ளிட்ட சேவைகளை அளிப்பதாக உறுதி செய்தல்.

13.14 நகர வளர்ச்சி திட்டம் என்று அழைக்கப்படும் தொலை நோக்கு திட்டம் தயாரித்தல், திட்டங்கள் தயாரித்தல், நிதிகளை மேம்படுத்துவது, தனியார் துறையின் திறனை மேம்படுத்தல் போன்ற வற்றை இத்திட்டத்தின் உத்திகள் உள்ளடக்கியுள்ளது. இத் திட்டத்தின் கால அளவு 2005 ஆம் ஆண்டு

தொடங்கி 7 ஆண்டுகளாக இத்திட்டத்திற்கு ஒருங்கிணைக்கும் முகமையாக தமிழ் நாடு நகர் நிதி வளர்ச்சிக் கழகம் இயங்கும். தமிழ் நாடு அரசில் இத் திட்டத்திற்கான துறை, நகர நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறையாகும். இத் திட்டத்தின் கீழ் மைய அரசால் மானியம் பெற கண்டறியப்பட்ட நகரங்களில் சென்னை நகரம் ஒன்றாகும். இத் திட்டத்திற்கு முன் தேவைகளில் ஒன்றான நகர வளர்ச்சி திட்டம் தயாரிக்கப்பட்டு அது மைய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

13.15 சென்னை நகரத்தின் பலம், பலவீனங்கள், வாய்ப்புக்கள் மற்றும் தாக்கங்கள் கீழ் கண்ட அட்டவனையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| பலம் | வாய்ப்புகள் |
|---|---|
| வலுவான வணிகம் மற்றும் தொழில் வள அடிப்படை | எங்கும் வியாபித்திருக்கும் உன்னதமான தொலை தொடர்பு வசதிகள் |
| திறனும் கல்வியறிவும் பெற்ற மனித வளம் | வளர்ச்சியுடன் இணைந்த சீரமைப்புகள் |
| உயர்மட்ட கல்வி நிறுவனங்கள் | பொது மற்றும் தனியார் பங்கேற்பு |
| செழித்த நகர நிலச் சந்தை மற்றும் வளர்ச்சியடைக்கூடிய நிலங்களின் இருப்பு | |
| தடையற்ற மற்றும் தரமான மின்வசதி | |
| **பலவீனம்** | **அபாயங்கள்** |
| போக்குவரத்து நெரிசல் | தானியங்கி வாகனங்களால் உண்டாகும் மாசு |
| போதிய உள்கட்டமைப்பு இல்லாமை | சில பகுதிகளில் மிதமிஞ்சிய மக்கள் நெருக்கம் |
| தண்ணீர் பற்றாக்குறை | உற்பத்தித் தொழிற்சாலைகள் குறைதல் |

**வளர்ச்சி திட்டத்தில் நிர்வாக அமைப்பு**

13.16 வேகமான மக்கட்தொகை வளர்ச்சிகளின் விளைவால் பெரு நகரங்களில் வளர்ச்சிகளுக்கு ஏற்படும் அழுத்தத்தால், தமிழக அரசு நகர்புற பிரச்சினைகளை சமாளிக்க, ஒவ்வொரு துறைகளுக்கும் அதாவது வீட்டு வசதி, குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றுதல் இன்ன பிற சிறப்பு முகமைகள் அமைத்துள்ளன. அவற்றுள் முக்கியமானவை சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம், தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமாகும். சென்னைப் பெருநகரங்களுக்கான நீண்ட கால திட்டம் மற்றும் பல நகர வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் 1973 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

13.17 சென்னைப் பெருநகரில் உள் கட்டமைப்பு வசதிகள் திட்டமிட்டு ஏற்படுத்தும் பணியை செய்து வருகின்ற துறைகள் / முகமைகள் மற்றும் அதன் பொறுப்புக்களின் விவரங்கள் கீழ் கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 13.02 துறைகளின் விவரங்கள் மற்றும் அதன் பொறுப்புகள்**

| வ எண் | துறை / முகமை | பொறுப்புகள் | எல்லைகள் |
|---|---|---|---|
| **உள்ளாட்சி நிறுவனங்கள்** | | | |
| 1 | சென்னை மாநகராட்சி | சாலை வசதி, மேம்பாலம் கட்டுதல், சுரங்கப்பாதை அமைத்தல், தெரு விளக்குப் பணிகள், திடக் கழிவு மேலாண்மை, குறு வடிகால், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் அதன் எல்லையில் | உள்ளாட்சி நிறுவன பகுதிகள். |
| 2 | நகராட்சிகள் | சாலை வசதி, பாத சாரிகளுக்கான சுரங்கப்பாதை கட்டுதல், தெருவிளக்கு, திடக்கழிவு மேலாண்மை, குறு வடிகால், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் அதன் எல்லையில் | |

| | | | |
|---|---|---|---|
| 3 | பேரூராட்சிகள் | | |
| 4 | கிராம ஊராட்சிகள் | | |
| **அரசு சார்பு துறைகள்** | | | |
| 5 | தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் | மனை மற்றும் கட்டிய வீடுகளை உள்ளடக்கிய அருகாமை இடங்கள் அமைத்தல், தன்னிறைவு வீட்டு மனைத் திட்டங்கள் | தமிழ் மாநிலம் முழுவதுமாக சென்னைப் பெருநகரம் |
| 6 | மாநகர போக்குவரத்துக் கழகம் | பேருந்து போக்கு வரத்து | சென்னைப் பெருநகரம் |
| 7 | காவல் துறைப் போக்கு வரத்து(சென்னை மாநகரம்) | போக்குவரத்து நிர்வாகம் | சென்னை மாநகரம் |
| 8 | தமிழ் நாடு மின்சார வாரியம் | மின் உற்பத்தி மற்றும் வழங்கள் | தமிழ் நாடு மாநிலம் |
| 9 | பொதுப் பணித் துறை | பெரும் வடிகால் அமைத்தல் மற்றும் பராமரிப்பு | தமிழ் நாடு மாநிலம் |
| 10 | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | நகர திட்டமிடுதல், திட்ட செயலாக்கங்களை ஒருங்கினைத்தல். | சென்னைப் பெருநகர் |
| 11 | சென்னைக் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் | சென்னைப் பெருநகரில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல். | சென்னைப் பெருநகர் |
| 12 | தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் | குடிசைப் பகுதிகளில் வீடு கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழத் தகுந்தமைக்கான வசதிகள் அளித்தல். | தமிழ் நாடு மாநிலம் முக்கியமாக சென்னைப் பெருநகர். |
| 13 | நெடுஞ்சாலைத் துறை | சென்னை நகரில் பிரதான சாலை, பிரதான மாவட்ட சாலைகள், பேருந்து தடங்கள், சாலை மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள், பாதசாரிகளுக்கான சுரங்கப்பாதைகள் கட்டுதல். | தமிழ் நாடு மாநிலம் |

*சட்டத்தின் படி சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தின் எல்லை சென்னைப் பெருநகரமாக இருந்தாலும், தற்போது அது சென்னை நகர் மற்றும் முகப்பேர், தகவல் நுட்பப் பகுதி போன்ற சில அன்மை நகரப் பகுதிகளை தன் செயல் முறைப் பகுதியாகக் கொண்டுள்ளது. இருப்பினும், இது தன் எல்லையை சென்னைப் பெருநகர் வரை விரிவாக்க உத்தேசித்துள்ளது.

13.18 இந்தத் துறைகளின் செயல்முறைப் பகுதி ஒன்றின் மேல் ஒன்றாக இருந்தாலும், இவற்றின் எல்லைப் பகுதிகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக சென்னைப் பெருநகரில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் பணி, சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் பொறுப்பில் உள்ளது. தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்த வரையில் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்புக்கு விடப்பட்ட சாலை, பிரதான சாலைகள் தவிர பிற சாலைகள் சென்னை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. நதி, கால்வாய் போன்ற பெரும் வடிகால்கள் பொதுப்பணித் துறையால் பாராமரிக்கப்படுகிறது. குறு வடிகால்கள் சென்னை மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களால் பராமரிக்கப்படுகிறது.

13.19 பலத் துறைகளுக்கான ஜவஹர்லால் நேரு நகர புனரமைப்பு திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட முதலீட்டு திட்டத்தின் விவரகள் கீழ் கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**குடிநீர் வழங்கல்**

13.20 சென்னைப் பெருநகரில் குடிநீர் வழங்கலுக்கான ரூபாய் 6321.00 கோடி முதலீடுகள் உத்தேசிக்கப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 13.03 குடிநீர் வழங்கலுக்காக சென்னைப் பெருநகரில் உத்தேசிக்கப்பட்ட முதலீடுகள்**

| கூறுகள் | திட்டம் | நிறுவனம் | மொத்தம் |
|---|---|---|---|
| | | | **ரூ.கோடியில்** |
| திட்டமிடுதல், சீர்திருத்தங்கள் மற்றும் நிறுவனங்களை பலப்படுத்துதல் | நீர்வள வளர்ச்சி முழுமைத் திட்டம் | சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் | 4.00 |
| | நீர் கசிவு ஆய்வு | | 9.00 |
| | சக்தி தணிக்கை ஆய்வு | | 10.00 |
| | நீர் தரம் மற்றும் கண்காணிப்பு ஆய்வு | | 4.50 |
| | செய்தி அறிவிப்பு உத்திகள் | | 7.00 |
| | அடிப்படை நிலஅளவை | | 2.00 |
| | மனித வள மேம்பாடு | | 7.00 |
| | வரைமுறைபடுத்தும் குழுமம் அமைத்தல் | | 1.00 |
| | குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதலுக்கான புவியியல் தகவல் தொகுப்பு மூலம் வரை படம் தயாரித்தல் | | 9.00 |
| | நிதி மேலாண்மையை நவீனமயமாக்கல் மற்றும் மேலாண்மை தகவல் தொகுப்பு | | 7.00 |
| | சமூக ஆதரவு | | 3.50 |
| | **துணை மொத்தம்** | | **64.00** |
| சேவைப் பணி | ஆதாரப் பெருக்குதல் | | 3,600.00 |
| | பகிர்வு முறையை விரிவாக்கல் | | 800.00 |
| | தற்போதுள்ள பகிர்வு முறையை நவீனமயமாக்கல் மற்றும் புனரமைத்தல் | | 1,150.00 |
| | சக்தியை பாதுகாத்ததல் | | 70.00 |
| | மீட்டர் / அளவை | | 210.00 |
| | மண்டல மண்டலமாக பிரிப்பது 24x 7 | | 350.00 |
| | புவியியல் தகவல்.தொகுப்பு மூலம் வரைபடம் தயாரித்தல் மற்றும் புனரமைத்தல் | | 70.00 |
| | **துணை மொத்தம்** | | **6,250.00** |
| மக்கள் தொடர்பு மேலாண்மை | குடிமக்களின்.கருத்துகளைப் பெற முறையினை அமைத்தல் | | 7.00 |
| | | | |
| | **துணை மொத்தம்** | | **7.00** |
| | **ஆக மொத்தம்** | | **6,321.00** |

**கழிவு நீர்அகற்றுதல்**

13.21 சென்னைப் பெருநகரில் கழிவுநீர் அகற்றுதலுக்கான ரூபாய் 2299.00 கோடி முதலீடுகள் உத்தேசிக்கப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

| அட்டவணை 13.04 கழிவு நீர் அகற்றுதலுக்காக சென்னைப் பெருநகரில் உத்தேசிக்கப்பட்ட முதலீடுகள் | | | |
|---|---|---|---|
| **கூறுகள்** | **திட்டம்** | **நிறுவனம்** | **மொத்தம்** |
| | | | **ரூ.கோடியில்** |
| கழிவு நீர் அகற்றுதலுக் கான வடிவமைப்பு மற்றும் செயலாக்க உத்திகள் | கழிவு நீர் அகற்றுதலுக்கான முழுமைத் திட்டம் | | 4.00 |
| | சக்தி தணிக்கை ஆய்வு | | 7.00 |
| | கழிவு நீர் தரத்தை கண்காணிக்க ஆய்வு | | 7.00 |
| | செய்தி அறிவிப்பு மற்றும் தொடர்பு உத்திகள் | | 7.00 |
| | மனித வள மேம்பாடு | | 7.00 |
| | சமூக ஆதரவு | | 7.00 |
| | துணை மொத்தம் | | 39.00 |
| பணிசேவை (கழிவுநீர் அகற்றல் | கழிவுநீர் பின்னல் வலை | சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் | 950.00 |
| | பழைய கழிவுநீர் அமைப்புகளை மறுவடிவமைத்தல் | | 550.00 |
| | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் | | 550.00 |
| | மறு சுழற்சி மற்றும் மறு உபயோகம் | | 175.00 |
| | சக்தி பாதுகாத்தல் முறை | | 35.00 |
| | **துணை மொத்தம்** | | 2260.00 |
| | **ஆக மொத்தம்** | | 2299.00 |

**மழைநீர் வடிகால்**

13.22 சென்னைப் பெருநகரில் மழைநீர் வடிகால், பெரும் வடிகால், மற்றும் ஏரிகள் புதுப்பித்தலுக்காக ரூபாய்1423.85 கோடி முதலீடுகள் உத்தேசிக்கப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

| **அட்டவணை 13.05** மழைநீர் வடிகாலுக்காக சென்னைப் பெருநகரில் உத்தேசிக்கப்பட்ட முதலீடுகள் | | |
|---|---|---|
| வகைகள் | | **ரூ.கோடியில்** |
| பெரும் வடிகால் | | 865.00 |
| குரு வடிகால் | | |
| | சென்னைமாநகராட்சி | 252.00 |
| | சுற்றியுள்ள நகராட்சிகள் | 72.34 |
| | பேரூராட்சிகள் | 38.05 |
| | கிராம ஊராட்சிகள் | 146.80 |
| ஏரிகளைப் புதுபித்தல் | | |
| | சென்னைமாநகராட்சி | 9.91 |
| | சுற்றியுள்ள நகராட்சிகள் | 3.36 |
| | பேரூராட்சிகள் | 1.57 |
| | கிராம ஊராட்சிகள் | 34.82 |
| | மொத்தம் | 1423.85 |

**திடக் கழிவு மேலாண்மை**

13.23 சென்னைப் பெருநகரின் திடக் கழிவு மேலாண்மைக்காக ரூ.847.21 கோடி முதலீடுகள் உத்தேசிக்கப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

| அட்டவணை 13.06 சென்னைப் பெருநகரில் திடக்கழிவு மேலரண்மைக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள முதலீடுகள் | | |
|---|---|---|
| வ.எண். | திடக்கழிவு மேலரண்மை | ரூ.கோடியில் |
| 1 | சென்னை மாநகராட்சி | 808.70 |
| 2 | சுற்றியுள்ள நகராட்சிகள் | 10.20 |
| 3 | பேரூராட்சிகள் | 3.18 |
| 4 | கிராம ஊராட்சிகள் | 5.66 |
| 5 | ஆடு தொட்டிகள் | 20.07 |
| | மொத்தம் | 847.81 |

**போக்கு வரத்து**

13.24 சென்னைப் பெருநகரில் போக்குவரத்து மேம்பாட்டிற்காக ரூ.24,854.08 கோடி முதலீடுகள் உத்தேசிக்கப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

| அட்டவணை 13.07 சென்னைப் பெருநகரில் போக்குவரத்துக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள முதலீடுகள் | | |
|---|---|---|
| வ.எண் | போக்கு வரவு மற்றும் போக்குவரத்து | ரூ.கோடியில் |
| 1 | நகரப் போக்கு கூறுகள் | |
| 2 | பிரதான , துணை பிரதான மற்றும்முக்கிய சாலைகளை நான்கு வழிப்பாதைகளாக அகலப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் | 1,700.00 |
| 3 | மேம்பாலங்கள் | 4,655.00 |
| 4 | சாலை/இரயில் சந்தி கடவு மேம்பாலங்கள்/சுரங்கப்பாதைகள் | 150.00 |
| 5 | நதியின் குறுக்கே பாலங்கள் | 45.00 |
| 6 | இணைப்புச் சாலைகள் | 1,650.00 |
| 7 | பிரதான சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட் போடுதல் | 278.00 |
| 8 | சிமெண்ட் கான்கிரிட் அமைத்து சாலை சந்திப்புக்களை மேம்படுத்துதல் மற்றும் புல்வெளி அமைத்தல் | 75.00 |
| 9 | பாதசாரிகளுக்கான சுரங்கப் பாதை | 102.00 |
| 10 | பேருந்து நிறுத்தங்கள் | 58.35 |
| 11 | சேவை துளைகள் மற்றும் மழை நீர் வடிகால்களை சாலை ஓரம்அமைத்தல் | 200.00 |
| 12 | புறநகர் சாலை மேம்பாடு | 197.00 |
| 13 | குறு மேம்பாலங்கள் கட்டுதல் | 48.00 |
| 14 | நகரச் சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட் போடுதல் | 95.00 |
| 15 | பல அடுக்கு வாகனம் நிறுத்துமிடம் | 145.00 |
| 16 | சாலை / இரயில் சந்தி கடவு மேம்பாலங்கள்/சுரங்கப்பாதைகள் | 396.00 |
| 17 | நெசப்பாக்க சாலை .விரிவாக்கம் | 14.00 |
| 18 | மேம்பாலங்கள் மற்றும் பாலங்கள் உள்ளிட்ட சாலை பணிகள் | 675.15 |
| 19 | சாலை பணிகள் | 480.32 |
| 20 | சென்னை மாநகர போக்குவரத்து (பேருந்து)) | 1,300.00 |
| 21 | போக்குவரத்து மேலாண்மை உள்கட்டமைப்பு தேவைகள் | 4,982.04 |
| 22 | தெரு விளக்குகள் | 8.22 |
| 23 | துரித ரயில் திட்டம் | 600.00 |
| 24 | மெட்ரோ ரயில் ( 45 கி.மீ) | 7,000.00 |
| | மொத்தம் | 24,854.08 |

பாரம்பரியம் மற்றும் பொழுதுபோக்கு

13.25. சென்னைப் பெருநகரில் பாரம்பரியம் மற்றும் பொழுது போக்கு மேம்பாட்டிற்காக ரூ.103.08 கோடி முதலீடுகள் உத்தேசிக்கப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

| அட்டவணை 13.08 சென்னைப் பெருநகரில் பராம்பரியம் மற்றும் பொழுது போக்கு மேம்பபட்டுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள முதலீடுகள் | | |
|---|---|---|
| வ.எண். | | ரூ.கோடியில் |
| 1 | ரிப்பன் கட்டிடத்தை புதுப்பித்தல் | 18.00 |
| 2 | விபி ஹாலை புதுப்பித்தல் | 5.00 |
| 3 | சென்னை நகரில் பொழுதுபோக்கு வசதிகள் ஏற்படுத்துதல் | 60.00 |
| 4 | நகராட்சி பகுதியில் பொழுது போக்கு வசதிகள் ஏற்படுத்துதல் | 8.46 |
| 5 | பேருராட்சி பகுதியில் பொழுதுபோக்கு வசதிகள் ஏற்படுத்துதல் | 3.24 |
| 6 | கிராம ஊராட்சி பகுதியில் பொழுதுபோக்கு வசதிகள் ஏற்படுத்துதல் | 8.37 |
| | மொத்தம் | 103.08 |

நகர் வாழ் ஏழை மக்களுக்கான அடிப்படை சேவைப் பணிகள்

13.26. அடுத்த 7 ஆண்டுகளில் சென்னைப் பெருநகர்ப் பகுதி முழுவதும் உள்ள நகர் வாழ் ஏழை மக்களின் மேம்பாட்டிற்காக உத்தேசிக்கப்பட்டிருக்கும் முதலீடுகள் ரூ.3887.23 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் முழு விவரம் அட்டவணை 113.09ல் விளக்கப்பட்டுள்ளது.

| அட்டவணை 13.09 சென்னைப் பெருநகரில் வாழும் ஏழை மக்களுக்குஅடிப்படை வசதிகள் செய்தல் | | |
|---|---|---|
| வ.எண். | ஏழைகளுக்கான அடிப்படை வசதி | ரூ.கோடியில் |
| 1 | சென்னை மாநகராட்சி | 1,319.96 |
| 2 | சென்னை பெருநகர் இதரப் பகுதி | 536.27 |
| 3 | குறைந்த வருவாய் மற்றும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான வீடுகள் அமைத்தல் | 2031.00 |
| | மொத்தம் | 3,887.23 |

வாகனம் நிறுத்துமிடங்கள்

13.27. சென்னைப் பெருநகரில் நகர வசதிகளை மேம்படுத்த ரூ.43.35 கோடி முதலீட்டு திட்டங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் வருமாறு.

| அட்டவணை 13.10 சென்னைப் பெருநகர சேவைகளுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள முதலீடுகள் | | |
|---|---|---|
| வ.எண். | வாகனம் நிறுத்துமிடம் | ரூபாய் கோடியில் |
| வாகனம் நிறுத்துமீடம் | | |
| 1 | வாகனம் நிறுத்துமிடம் - பேரூராட்சி | 15.38 |
| 2 | வாகனம் நிறுத்துமிடம் - கிராம ஊராட்சி | 28.47 |
| | ஆகமொத்தம் | 43.85 |

**துணை நகரங்கள் / சென்னைப் பெருநகரைச் சுற்றியுள்ள நகரங்கள்**

13.28 அடுத்த 6 ஆண்டுகளில் மாநகரத்தின் நெரிசலை குறைக்கும் ஏற்பாடாக சென்னை பெருநகர்ப் பகுதியைச் சுற்றிலும் துணைநகரங்கள் / மாநகரங்கள் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் முதலீடுகள் ரூ.5000.00 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

13.29 இத்திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்ட மொத்த செலவீனங்கள் ரூ.44,779.92 கோடியாகும். அதன் விவரங்கள் பின்வருமாறு

**அட்டவணை 13.11 சென்னைப் பெருநகரில் உத்தேசிக்கப்பட்டுள்ள முதலீடுகளின் தொகுப்பு**

| வ.எண் | கூறுகள் | மொத்த செலவீனம் | ஜவஹர்லால் நேருநகர புரைமைப்புத் திட்டம் | | |
|---|---|---|---|---|---|
| | | | மையஅரசு | தமிழக அரசு | ஐஆர்/.ஐ.எ ப் |
| | | *ரூபாய் கோடியில்* | | | |
| 1 | குடிநீர் வழங்கல் | 6,321.00 | 2,212.35 | 948.15 | 3,160.50 |
| 2 | கழிவு நீர் அகற்றுதல் | 2,299.00 | 804.65 | 344.85 | 1,149.50 |
| 3 | திடக்கழிவு மேலாண்மை | 847.80 | 296.73 | 127.17 | 423.90 |
| 4 | மழைநீர் வடிகால் | 1,423.88 | 498.36 | 213.58 | 711.94 |
| 5 | போக்குவரத்து | 17,254.08 | 6,038.93 | 2,588.11 | 8,627.04 |
| 6 | துரித ரயில் திட்டம் | 600.00 | 210.00 | 90.00 | 300.00 |
| 7 | மெட்ரோரயில் (45கி.மீ) | 7000.00 | 2450.00 | 1050.00 | 3500.00 |
| 8 | வாகன நிறுத்துமிடங்கள் | 43.85 | 15.35 | 6.58 | 21.92 |
| 9 | பாரம்பரியம் மற்றும்பொழுது போக்கு | 103.08 | 36.08 | 15.46 | 51.54 |
| 10 | துணை நகர வளர்ச்சி | 5000.00 | 1750.00 | 750.00 | 2500.00 |
| | மொத்தம் | 40892.69 | 14312.45 | 6133.9 | 20446.34 |
| | ஏழைகளுக்கான நகர அடிப்படைவசதி அமைத்துக் கொடுத்தல் | 3,887.23 | 1943.61 | 1943.62 | |
| | **ஆகமொத்தம்** | **44779.92** | **16256.06** | **28523.86** | |